மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்வது மாதிரி தொடர்ந்து கேள்வி நேரத்தை நிறுத்தி வைப்பதும் நல்லதல்ல. ஆனால், நேரத்தினுடைய அருமைக் கருதி, செய்ய வேண்டிய அவசியம் வருகிறது. இல்லாவிட்டால் நாளை கேள்வி நேரத்தை வைத்து, ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்துவிட, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்ற முறையைக் கையாண்டு (சிரிப்பு) நிறுத்திக் கொள்வார்களானால் கூட்டுறவுத் துறையை எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருடைய பதில் உரை நாளை தொடரும் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் கேள்வி நேரம் நாளை உண்டு.

கேள்வி நேரத்திற்குப் பின்னர் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய பதில் உரை தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 2.18 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

90. கோரிக்கை எண். 4—தமிழ்நாடு பொது விற்பனை வரிகள் ஏனைய வரிகள் தீர்வைகள்— நிருவாகம், 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

91. கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்கள்—நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்).